உ

சிவமயம்.

தெய்வத்தன்மைவிளங்கிய

குகைநமசிவாயதேவ ரருளிச்செய்த

அருணகிரியந்தாதி

மூலமும்

வே, ஆறுமுகமுதலியாரால் செய்த

உரையும்.

இஃது,

கோகுலாபுரம்

அருணாஜல முதலியாரால்

பார்வையிட்ட பிரதிக்கிணங்க

திருப்பதி,

இரத்தின முதலியார்

அண்டுஸன் அவர்களது

கலைக்கியானமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

(இதன்விலை அணா. 3.)

நெ, 34 முத்துகிருஷ்ணன் தெருவு

உ

கணபதிதுணை.

தெய்வீகம் விளங்கிய

குகைநமசிவாயதேவர்.

சரித்திரவரலாறு.

மல்லிகார்ச்சுனத்திலிருந்துதெற்கே சிவஸ்தலயாத்திரைசெய்து வருகிறேனென்று தமது குருவினனுமதி பெற்றுக்கொண்டு சஞ்சரிக்கும்போது தமது குருமார் யெழுந்தருளிய அண்ணாமலையார்சொற்படி திருவண்ணாமலையிலேகுகையினிடத்து மகிமையுடனிருந்த கன்னடமூர்த்தியாகிய குகைநமசிவாயதேவர் அவ்வண்ணாமலையார்வரப்பிரசாதத்தினாலே அவரை இவ்வருணகிரியந்தாதியாற் ஸ்தோத்திரஞ்செய்துக் கொண்டிருந்து மலபரிபாகம்பெற்ற குகைநமசிவாயதேவர் முதலிய சிஷியவர்க்கங்களுக்கு தனகணபவஞானமாகிய சிவஞானத்தை நன்குபதேசித்து இனிதுவிளங்கிக்கொண்டிருந்தனர்.

மெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

அருணகிரி யந்தாதி

மூலமும்-உரையும்.

காப்பு.

விநாயகர்-துதி.

சித்திதரும்புத்திதருஞ்செந்திருவைச்சேர்விக்கும்
பத்திதருமெய்ஞ்ஞானம் பாலிக்குங்கொத்தி
யரிமுகனைக்காய்ந்த வருணேசர்தந்த
கரிமுகனைக் கைதொழுதக்கால்.

(இ-ள்.) ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் இரணியசம்மார நிமித்தம் கற்றூணில் நரசிங்கமாயுதித்து அவ்விராட்சதனுடைய மார்பைப்பிளந்து வுதிரத்தைக்குடித்ததால்வெறிகொண்டுலோகலோகங்களையெல்லாம் அதம்பண்ணஎத்தனித்தகாலத்தில் சார்தூலபட்சியாய் அவதாரஞ்செய்து நரசிங்கத்தைபபிளந்துவைகுந்தத்துக்

கனுப்பிய அருணாசலயீஸ்வரர்புத்திரராகியயானைமுக த்தையுடைய விநாயகக்கடவுளைத் தொழுதவர்களுக்கு காரியசித்தியும் நல்லபுத்தியும் இலட்சுமிகடாட்சமும் தெய்வபக்தியும்மெய்ஞ்ஞானமும் உண்டாகும். எ-று.

கார்கொண்டமேனியனுங் கஞ்சனுங்காணுப்பெருமை
யார்கொண்டுரைசெய்வா ரம்புவியிற்சீர்கொண்
டருணகிரிமேவுகின்ற வையாநீவேண்டிக்
கருணைபுரியா திருந்தக்கால்.

(இ-ள்.) மேகம்போன்ற திரேகத்தையுடைய மகாவிஷ்ணுவுந்தாமரைமலரிலுதித்த பிரமதேவனும் காணுதற்கரியஉமதுபெருமையையிப்பூமியின்கண்ணுள்ளவர்களில் யார் அறிந்து துதிக்கவல்லவர்கள் கைலையையொத்த திருவண்ணாமலையிலெழுந்தருளியஐயனே நீர்கிருபைசெய்யாவிடில். எ-று. (௨)

காலைமலர் தூவக் கருத்தரியா நாயேற்கு.
வேலைவிடமுண்ட விமலனேமேலாய்
வாசிகனேகண்பலித்து வாழ்விக்குஞ்சோணகிரி
தேசிகனே நீகண்டாய் திக்கு.

(இ-ள்.) திருப்பாற்கடலிலுதித்த விஷத்தையுண்ட நிர்மலஸ்வரூபனேமும்மூர்த்திகளுக்கு மேலாகியகடவுளே மாணிக்கமலையென்னும் அருணாசலத்திற்கதிபனே சராசரங்களையன்போடு இரட்சிக்குந்தயாபரனே காலையில் நல்லமலர்களைக்கொண்டு பக்தியுடனே உமது பாதாரவிந்தத்தைத் துதிக்கத்தக்க அறிவில்லாதஎளியேனுக்குஉம்மையல்லால் வேறுதிக்குண்டோ. எ-று.

திக்குவேறில்லை திருவுளமேயல்லாம்
விக்குவேளைக்காய்ந்த வீசனேமிக்கவிடந்
தன்னையுண்டசோணகிரித் தாணுவேநாயேற்குப்
பின்னையுண்டோ நீயல்லாற்பேசு.

(இ-ள்.) கரும்பைவில்லாகவளைத்துசராசரங்களைமயக்கும்மன்மதனைநெற்றிக்கண்ணாலெரித்த அருணாசலக்

கடவுளே திருப்பாற்கடலிலெழுந்தவிஷத்தையமுர்தம் போலுண்டகாவலனே அடியேனுக்கு உம்மையல்லாமல் வேறுதிக்குண்டோசொல்லு. எ-று. (௪)

பேசுமவர்வஞ்சப் பிறப்பறுக்குமென் றுலகில்
வீசுபுகழ்ச்சோணகிரி வித்தகாமாசிலா
வண்ணுமலையானே யன்னைவயிற்றென்னையுருப்
பண்ணுமலையா கண்பார்.

(இ-ள்.) மெய்யன்போடு துதிப்பவர்களுடைய பிறவித்துன்பத்தை மாற்றுவாயென்று இப்பூமியின்கண்ணுள்ள புண்ணியவான்கள்புகழும் அருணசலக்கடவுளே இதுவரையிலும்பிறவித்துன்பத்திலுழன்ற அடியேனை இனியாவது தாய்வயிற்றி லுருப்பெடுத்ததால் கிருபானேக்கஞ்செய்யும். எ-று. (ரு)

பாராமனீயிருந்தாற்பார்மீதிஞயேனுக்
காராவார்சோணகிரி யண்ணலே-தீராப்
பிறப்பையகற்றுதற்கும் பிஞ்ஞகனேசூழ்ந்த
விறப்பையகற்றுதற்கு மின்று.

(இ-ள்.) மூடனுகிய அடியேன்பேரில் தேவரீர்கடாட்சம்வைத்துரட்சியாவிடில் இப்பூமியிலென்னைஇரட்சிப்பவருண்டோ இல்லைதிருவண்ணுமலையில் வாசஞ்செய்யுங்கர்த்தனே பிறப்பிறப்பென்னுஞ் சமுத்திரத்தில் அடியேன்மூழ்காவிதம் அருள்செய்யும்-எ-று. ()

இன்றுபோகாவோ விருனையுமும்மலமு
நின்றுதமியேனை நெருக்காமனன்றிதரு
மாரணனேசோணகிரி யத்தனேமாறேடுங்
காரணனேநீநினைந்தக் கால்.

(இ-ள்.) அடியேனைப்பற்றியிருக்கும் இருவினையென்னும் நல்வினைதீவினையும்மும்மலனென்னும்ஆணவம் மாயைகாமியமும் எளியேனைவருந்தாமல் இன்றேநீங்காதோ நல்லகுளிர்ச்சிபொருந்திய கங்கையைசடாமகுடத்திற்றரித்த அருணசலக்கடவுளே ஸ்ரீமகாவிஷ்

ணுவும்பிரமதேவனும் காணுதற்கரியகர்த்தனே தே
வரீர்கிருபாநோக்கஞ் செய்தால். எ-று. (எ)

காலன்றனக்கஞ்சக் காரணமென்னெஞ்சமே
யாலமுகுந்த வருணேசன் கோலத்தை
நேசமுற்றுநீகருதி னீங்காமனின்றலைக்கும்
பாசமுற்றுநீங்கும் பரன்.

(இ-ள்)அஞ்ஞானம்பொருந்தியஎனதுநெஞ்சமேநீ
இயமனுக்குப்பயப்படவேண்டிய காரணமென்ன விஷ
ததையுண்டஅருணாசலக்கடவுளை பக்தியுடனேதுதித்
தாய்உன்னைவிட்டுநீங்காமல் வருந்தும்பாசபந்தங்களை
யறுப்பார். எ-று, (அ)

பரமனீயென்று பணிந்துருகிப்பாடிக்
கரஞ்சேர்த்துநீர்சோரக் கண்கள்-வரங்கேட்ட
வென்னவாவின்படியே யீந்தாயிதற்கருணை
மன்னவாகாணேன் கைம்மாறு.

(இ-ள்.) பரமேஸ்வரன் நீயேயென்று பக்தியோடு
தெண்டனிட்டுதோத்திரஞ்செய்துஇருகரங்களையும்சிர
சின்மேல்கூப்பி இரண்டுகண்களிலும் ஆனந்தவெள்
ளம்பொங்கிநின்றுஅடியேன்ஆசையோடுகேட்டவரங்
களையெல்லாம்கருத்தின்படியேகொடுத்தீர்அருணாசலத்
தில்வசிக்கும் என்னையனே இதற்கு என்னாற்செய்யப்
பட்டபிரதியுபகாரமொன்றுகாணேம் எ-று. (கூ)

மாறுகொண்டதக்கன் மனோரதமெல்லாந்தவிர்த்து
வீறுகொண்டசோணகிரி வித்தகாவாறுகொண்ட
செஞ்சடையாய்நின்னைத் தெரிசித்தல்வேண்டுமென்
பஞ்சடையாமுன்னே பரிந்து. [கண்

(இ-ள்.) உம்முடைய மகிமையறியாமல் விரோதங்
கொண்ட தக்கனுடைய எண்ணங்களைக்கெடுத்து வெ
ற்றிபெற்ற அண்ணாமலையானே கங்காதேவியைத்தரி
த்த சிவந்தசடாமகுடத்தையுடையவனே வயதுமுதிர்

ந்து என்கண்கள் பஞ்சடையாமுன்னம் தேவரீரைப்ப க்தியுடனே கண்டு தெரிசிக்கவேண்டும். எ-று. ()

பரிந்தணிந்தவெண்ணீறும் பாம்புந்திக்கண் ணு
மரிந்தசிரமாலை யழகுந்-தெரிந்து
நெருக்குமாம்வல்வினையை நீக்குமருணேசற்
கிருக்குமாங்கோலங்க ளேத்து.

(இ-ள்.) நம்மைவருத்துகிறகொடியவினையை அக ற்றும்அருணாசலக்கடவுளினுருவமெப்படியெனில் பிர காசத்துடனே வணிந்தவெண்ணீறும்-நாகாபரணமும் அக்கினிக்கண்ணும் உருத்திரர்களால் அறுத்துக்கோத் தசிரமாலையும்பொருந்தியதாம் அதைக்கண்டுமனமேநீ துதிப்பாய்-எ-று. (கக)

கோலமுதற்றேடிநெஞ்சே கூப்பிட்டுங்காணாத
கோலங்குருவடிவு கொண்டேதா னாலந்
தரித்தபிரான் சோணேசன் றுன்முனிந்துவேளை
யெரித்தபிரான் வந்தானிதென்.

(இ-ள்.) அஞ்ஞானம்பொருந்தியஎன்மனமேபிர் மாவிஷ்ணுவாலுந்தேடிக்காணாதற்கரியவரும் திருப் பாற்கடலிலெழுந்தகாளகோடிவிஷத்தைக்கண்டத்திற் றரித்தவரும் மன்மதனையெரித்தவருமாகிய அருணாசலக் கடவுள்குருவடிக்கொண்டுவந்தென்னகாரணம்-எ-று.

என்னதவப்பயனோ வேழையேற்கென்றறியேன்
முன்னமறைகாணாத முக்கண்ணா நின்னையே
தேடுகைக்குஞ்சோணகிரி தேசிகனே நின்புகழைப்
பாடுகைக்கும்பெற்ற பயன்.

(இ-ள்.) நான்குவேதங்களும் தேடிகாணுதற்கறிய அருணாசலக்கடவுளே ஏழையாகியநான் முன்சன்மத் தில் என்னபுண்ணியஞ்செய்தேனோதேவரீரை ஆசை யோடு தேடுதற்கும் தேவரீரதுகீர்த்தியைத்துதிக்கும் ஏதுவாகிய பலனைப்பெற்றேன். எ-று. (கங)

பெற்ருேம்பலனைப் பிறந்ததனுனெஞ்சமே
யற்ருேமனத்தி லனவரதம்-பற்றுவா
ருள்ளலைக்குந்தீவினையை யோட்டுமருணகிரி
வள்ளலைக்கொண்டாட வரம்.

(இ-ள்.)மனமேநாம்இந்தமானிடஜனனமெடுத்தால் மெய்யன்போடுதுதிப்பவர்களதுதீவினையகற்றும் அருணுசலக்கடவுளைத் துதிக்கவரம்பெற்ருேம். எ-று. ()

வரம்பலிக்குமெய்ஞ்ஞான வாழ்வேபலிக்குஞ்
திரம்பலிக்குஞ்செல்வம் பலிக்கு-முரம்பலிக்குஞ்
சோணுசலனைச் சுவாமிதனையுள்ளத்தே
காணுமற்கருத்தென் கருத்து

(இ-ள்,) அஞ்ஞானத்துக்கிடமாகியஎன்மனமேஅருணுசலக்கடவுளைத்துதித்தால் நினைத்தவரமும் மெய்ஞ்ஞானமும் நீடித்தவாழ்வும் நல்லபுத்தியும் இலட்சுமி கடாட்சமும் தைரியமும்உண்டாகும் அக்கடவுளைநினையாதவர்கள் நெஞ்சம் என்னநெஞ்சம். எ-று. (கரு)

கருத்திலருணேசன் கஞ்சமலர்த்தாளை
யிருத்திநினைப்பாரை என்றும் வருத்துமோ
நாட்டும்பலவுயிரை நாடோறும்பின்ருெடர்ந்து
வாட்டும்பிறவிநோய் வன்பு.

(இ-ள்.) ஸ்ரீகைலாசபதியாகிய அருணுசலக்கடவுளுடைய தாமரைமலரையொத்த இரண்டுபாதங்களையும் மனத்திலிருத்தித் துதிப்பவரை எழுவகைத்தோற்றமாகிய சீவராசிகளைத்தொடர்ந்து பிறதிக்கும் பிறவிநோயானதுவருத்துமோ. எ-று. (கசா)

வன்பெருக்கிற்கண்மிதக்கும் வாய்முதலைபிள்ளைதரு
மென்புருக்கொள்பெண்ணு யிருக்குமே யன்பருக்கு
நாட்டுகுருசோணகிரி நாதனடியார்மூவர்
பாட்டினிசை கேட்டபரம்.

(இ-ள்.) பூமியிலுள்ள அன்பர்களுக்குகுருமூர்த்தியாகியமெய்ஞ்ஞான முபதேசிக்கும் அருணுசலக்கடவு

ளுடைய அடியார்களில் மூவராகிய அப்பர் சுந்தரர் சம்பந்தர் என்னுமகத்துகளுடைய திருப்பாடல்களைக் கேட்டால் சமூத்திரத்திலிட்ட கருங்கல்மிதந்து கரை யேறும் முதலைவிழுங்கிய பிள்ளைபிழைத்துவரும்எலும் புகள் பெண்ணுருவாயெழுந்திருக்கும். எ-று. (கஎ)

பரமனருணேசன் பதம்பணியார்க்கென்றுங்
கருமஞ்சிதையுமெனல் கண்டோ-மருமந்த
கூட்டுத்தலைபோய்க் கொடியதக்கன்வேள்வியிலே
யாட்டுத்தலை யாகையால்.

(இ-ள்.) பரப்பிரம சொரூபியாகிய அருணசலக்கட வுள் பாதாரவிந்தங்களைத்தியானஞ் செய்தவர்கள்செய் யுங்கருமஞ் சிதையுமென்பதைப் பிரத்தியட்சமாகக்கே ட்டிருக்கிறோம் அதேனெனில் கர்வத்தினுல் அவரை மதியாமல் யாகஞ்செய்த துன்மார்க்கனுகியதக்கன்சிரத் தை யிழந்து ஆட்டுத்தலைபெற்றதால். எ-று. (கஅ)

ஆலம்வருவதுகண் டஞ்சியமரர்குழாஞ்
சாலமெருண்டோடுஞ் சமயத்தி-லோலமென
நின்ருனுலகரிய நேசரடியாரிடத்து
குன்ருத சோணகிரிக்கோ.

(இ-ள்.) சமுத்திரத்தில் ஆலகாலவிஷம்பரவி வரு வதைக்கண்டு தேவர்களெல்லாம் நடுநடுங்கிப் பயந் தோடி முறையிட்டகாலத்தில் அவ்விஷத்தைத்தமது திருக்கரத்தாலெடுத்து புசித்துநின்ருர் அடியார்களி டத்தில் பரிபூரண கடாட்சம்வைத்த அருணசலக் கட வுள். எ-று. (கக)

கோடிவிதிமாளிற் குலாவுகமலக்கண்ண
ஞேடிவடவா லுறங்குமே-நாடுங்கா
லக்கண்ணர்கோடி யழியினருணகிரி
நக்கனருள்சற்றேநகும்.

(இ-ள்.) கோடிபிரமாக்கள் பிறந்து ஒவ்வொருத்தர் தெய்வவருஷத்தில் நூருயிரவருஷம் தமதுதொழில்

களைநடத்தி பிறந்தால் தாமரைமலரையொத்த கண்களுடைய ஸ்ரீமகாவிஷ்ணுசென்று வடவிருட்சமான ஆலவிருட்சத்தினிலையில் பள்ளிகொள்வா ரதுபோல கோடி மகாவிஷ்ணுக்கள் அழிந்தால் நக்கனெனும் அருணசலக்கடவுள் சற்றுநேரம் புன்னகைசெய்வார்.

நகுமானையேந்தருணை நம்பாபிறப்பிற்
புகுவேனைக்காக்கும் புனிதா-தகுமேனைப்
பெற்றதுணை நீயல்லாற் பேருலகிநாயேனுக்
குற்றதுணைமற்றியாவ ரோது.

(இ-ள்.) புன்னகையையுடைய மானெனும் பார்வதியை இடபாதத்திற்றரித்த அருணசலக்கடவுளே பிறப்பென்னும்ஊரலிற்புகுந்தும் அடியேனை அவ்வழியிற் புகுதாமற்காக்கும் சீவகாருண்ணியனே இவ்விடத்தில் எனக்கு நெருங்கிய துணை நீயல்லாமல் பெரிய உலகத்தினிடத்திலுள்ளவர்களில் யார் நீ சொல்வாய். எ-று,

ஓதக்கடனஞ்சை யுண்டசோணசலனை
யோதக்கடநெஞ்சே யோதினுற்-பாதம்
பெறலாநமது பிணிமூப்புச்சாக்கா
டறலாங் கரையேறலாம்.

(இ-ள்.) மூடத்துவம்பொருந்திய என்மனமே சொல்லுதற்கரிய சமுத்திரத்திலுற்பவித்த விஷத்தைப் புசித்த அருணசலக்கடவுளைத் துதிப்பாயாகஅப்படித் துதித்தால் அவருடைய திருப்பாதங்களைக்காணலாம் நமது பிணிமூப்பு சாக்காட்டென்னும் மூவுபாதிகளையுங் கடந்து கரையேறலாம். எ-று, (உஉ)

ஆமென்றுநம்பி யனுதினமும்போற்றினு
னுமென்றுபற்றி நலமாகக்-காமித்துச்
சிட்டாகுஞ்சோணகிரி சிந்தித்தானெஞ்சமே
விட்டேகும் வெய்யவினை.

(இ-ள்.) அஞ்ஞானம் பொருந்தியஎன்சிவமேதிருவண்ணமலையிலெழுந் தருளியிருக்கும் அருணசலக்கட

வுளைப் பரப்பிரமமென்று பக்தியுடனே எந்நாளுந் துதித்தால் அப்பெயர்க்குரியவன்யானேயென்றுஎதிர்படுவர் அதனால் நமதுகொடிய வினைநீங்கிப்போம்-எ-று.

வெய்ய பிறவிதனை வேரறுக்குஞ் சோணகிரி
யையரடி யார்பாட்டிற் கல்லாமற் - றுய்யகரா
வாய்க்குமோ பிள்ளையுந்தண் வாரிதியிற் கன்மிதந்து
காய்க்குமோ வாண்பனையுங் காய்.

(இ-ள்.) கொடிதாகிய பிறவித் துன்பத்தைவேரறுக்கிறவரும் அருணாசலக்கடவுளது அடியார்கள்பாடல்களுக்கல்லாமல் முதலைவாயி லகப்பட்ட பிள்ளை உயிர்த்தெழுமோ சமுத்திரத்திலிட்ட கருங்கல்மிதந்துகரையேறுமோ ஆண்பனைக்காய்க்குமோ-எ-று. (உச)

காய நெகிழாமுன் கண்க ளிருளாமுன்
வாயிலுள்ள பல்லும் வழுவாமுன் - காயம்பார்த்
தோடிநமன் வாராமுன் னுள்ளமே சோணகிரி
நாடிநம வென்றே நட.

(இ-ள்,) சுகதுக்கத்துக்கிடமாகிய மனமேசரீரந்தளர்ந்துவருத்தமடையாததற்குமுன்னும் கண்களொலிகுறையாமுன்னும் வாயிலுண்டாகிய பற்கள்குறைந்து அசையாததற்கு முன்னும் தமது திரேகத்தைக்கண்டு எமன் நெருங்காமுன்னம் அருணாசலக் கடவுளைத்துதித்துஎதிர்கொள்வாய்-எ-று. (உரு)

நடக்குங் குலங்கல்வி நம்மவென்பா ராசை
யடக்கும் வகைசற் றறியார் - தொடுக்குநூல்
காட்டுமோ சோணேசன் கஞ்சமலர்த் தாளிணையைக்
கூட்டுமோ சொல்லீர் குலம்

(இ-ள்.) தங்கள் நடக்கையாலுண்டாகியஉயர்ந்தகுலமும்நிறைந்தகல்வியும்நாமேபெற்றோமென்பார்ஆசையென்னு துக்கமதையடக்கவறியார் தாங்கள்கற்றநூல்கள் அருணாசலக்கடவுளின்தாமரைமலரையொத்த

பாசங்களை காட்டுமோ உயர்ந்தகுலமும் அவருடன் சேர்க்குமோசொல்வீர்-எ-று. (௨௬)

குலமில்லார் வன்மைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ராஞலு நன்றே-வலம்வந்
தரிய திருவருணை யண்ணலுக்கா ளாவார்
பெரியவர்க்கு மேலான பேர்.

(இ-ள்.) உயர்ந்தகுலத்தைப் பெருதவர்களாஞலும் நல்லபுத்தியில்லாதவர்களாஞலும்கல்வியில்லாதவர்களாஞலும் நன்றேசொல்லுதற்கரிய திருவருணையை வலம்வந்துஅருணசலக்கடவுளுக்குஅடியாரஞல்அவர்களே வேதசாஸ்திரங்களையுணர்ந்த அந்தணர்களுக்குமேலானபெரியோர்-எ-று. (௨௭)

பேரும் பெரும் வாழ்வும் பிள்ளைகளும் வேண்டுவா
ராரும் பரவு மருணேசன்-சீரை
யுறக்கத் திலுமறக்கவொண்ஞு துரைக்கிற்
பிறக்கக் கிடையாது பின்.

(இ-ள்.) கீர்த்தியையும்மிகுந்தசெல்வத்தையும்புத்திரர்களைவேண்டிவருந்துபவர்கள் அவ்வாசையை நீக்கிவேதத்தின்பொருளையறிந்ததபோதனர்முதலியசகலருந்துதிக்கும் அருணசலக்கடவுள் புகழைநித்திரையிலும் மறவாமல் சிந்திப்பாராஞல் பிறப்பிறப்பை நீக்கி மோட்சத்தையடைவார்-எ-று. (௨௮)

பின்னறியேன் முன்னறியேன் பேதையேன் பாமாலை
யென்னறியேன் சோணகிரி யீசனே-நின்னருளைக்
கொண்டுரையா நிற்குங் குறியுங் குறிதேடுங்
கண்டுரையா தென்றன் கருத்து.

(இ-ள்.) சதுர்யுகத்திலுமறியக்கூடாத அருணசலக்கடவுளே அறிவில்லாதவஞகியயான்பூர்வசன்மங்களையுமறியேன் இனிமேலுண்டாகுஞ்சனனத்தையுமறியேன் தேவரீரை பாமாலைகளைக் கொண்டுதிக்கவுமறியேன்உமதுகிருபாகடாட்சமறிந்துசொல்ல அரிதாயிருந்தாலும்

திவ்வியமங்களஸ்சொரூபத்தின்பெருமையாவதுஇன்னதென்று புறியாதுஎன்னுடையநெஞ்சம்-எ-று.

கருத்தறிந்த மெய்யடியார் கண்காண வெள்ளை
யெருத்தில்வருஞ் சோணகிரி யீசா-பருத்த
வலங்கார நால்வேத னைந்தலையு ளொன்றைக்
கலங்காம னீயறுத்தாய்கண்டு.

(இ-ள்.) நல்லபுத்தியுடைய அடியார்கள்கண்களாற்கண்டுதரிசிக்கவெண்மைநிறமுள்ள ரிஷபத்தின்மேலேறினவரும் அருணசலயீசனேமிகுந்த அலங்காரத்தையுடையநான்குவேதத்தையும்உணர்ந்தபிரமனதுஐந்துசிரசில் ஒருசிரசை நீர்மனக்கிலேசமில்லாமல் அறிந்தீர் எ-று. (கூ)

கண்டுமிணை யென்பார் கருத்துநா வும்வாழி
யண்டர்கோ வேயருணை யண்ணலே-விண்டுவாஞ்
சங்கையெடுத்தோன்கண் சரணத்திற் சாற்றுமுன்றன்
செங்கையிலே வேதன் சிரம்.

(இ-ள்.) பக்தர்களாகிய பெரியோர்கள் தேவரீரது திருவிளையாட்டைக்கண்களாற்கண்டாலும்யின்னுங்காணவேண்டுமென்னும் விருப்பத்தால் கண்டதில்லையென்பார் இவர்களைபொத்தபெரியோர்களதுகருத்தையும் நாவையும்ஆலயமாகக்கொண்ட தேவதேவனேஅண்ணமலையீசனேவெண்மைநிறமுள்ளகங்கைத் தரித்தஸ்ரீமகாவிஷ்ணுவானவர்தாமரைமலருக் கொப்பாகிய கண்களிலொன்றைதேவரீரதுபாதத்திற்சாற்றியிருக்கிற உமதுசிவந்தகரத்தி பிரமகபாலம் எதிர்கொண்டீர்.

சிரமாலை தானணிந்து சேவிலுகந் தேறி
யருமா மறைதேடு மண்ணல்-வருமா
முனிக்கூட்டம் போற்று முதல்வனரு ணேச
னினிக்கூட்டான் றுன்பத் தெமை.

(இ-ள்.) சிரமாலையணிந் துரிஷபவாகனத்தின்மே ல்விருப்பத்தேடேறும் அரிதாகிய நான்குவேதங்களுந் தேடப்பட்ட சர்வேசன்மகா தவத்தைப்பெற்றமுனீஸ் வரர்கள் தோத்திரஞ்செய்யும் அருணசலக்கடவுள் எங் களை துக்கசாகரத்திலே அலையவிடார்-எ-று. (கூ௨)

எமையாளுஞ் சோணகிரி யீசா நின் பாகத்
துமையாளு நீயு முகந்த- சமயத்
திருக்கின்ற கோலத்தை யான்காண வேண்டி
யிருக்குங் கருணைசெய்வா யென்று.

(இ-ள்.) எங்களை அடிமைகொண்டாலும் அருண சலக்கடவுளேஉமது இடபாகத்திலமர்ந்திருக்கும்உமை யவளும் தேவரீரும் சந்தோஷத்துடனிருக்கும் அலங் காரத்தை மூடனாகியயான்கண்களாற்காண இச்சித்தே ன் கடாட்சசம்செய்வீர்-எ-று. (கூகூ)

என்றுமரு ணேச னிருபதத்தை நம்பாதார்
குன்றில் வனத்திற் குகையதனிற்-சென்று
திரிந்தேன் பலமருந்து தின்றுசில கால
மிருந்தே னிராமலிருந் தேன்.

(இ-ள்.) எப்போதும் அருணசலக்கடவுளது இர ண்டுபாதங்களையும் நம்பி துதியாதபேர்கள் துறவடை ந்து மலையிலும் காட்டிலும் குகையிலும்போய் திரிந் தாலென்ன அனேகஔஷதங்களான இலைசருகுகளைப் புசித்து சிலாகாலம் உயிரோ டிருந்தாலென்ன இராம லிருந்தென்ன பிரயோசனமொன்றுமில்லை-எ-று.

ஏனமனந் தேட விணையடியுஞ் சீர்முடியுந்
தானவற்றிற் கெட்டாத தாணுவா-ஞானத்
தழல்கண்ட மேனித் தலைவனரு ணேசன்
கழல்கண்டார் காணார் கரு.

(இ-ள்.) ஸ்ரீமகாவிஷ்ணுவானவர்பன்றியாகவும்பிரமாவானவர்அன்னமாகவும் ரூபங்கொண்டு இணையில்லாத அடியையும்சிறபுற்றோங்கியமுடியையும்கற்பகோடிகாலந்தேடியும் அவர்களுக்குப் புலப்படாமல்நின்ற அழகையொத்த திருமேனியையுடைய அருணாசலக்கடவுளதுபாதாரவிந்தங்களைக்கண்டு தெரிசித்தவர்கள் பிறப்பிறப் பென்னு மூசலில் வருந்தார்கள்-எ-று.

கருமா முகில்வண்ணன் கஞ்சனுக்கு மெட்டாப்
பெருமான் விடையேறும் பெம்மா-னொருமான்
மழுவேற்குஞ் சோணகிரி மன்னனடி யாரைத்
தொழுவேற்கு முண்டோ துயர்.

(இ-ள்.) கருத்தமேகத்தை யொத்த திரேகத்தையுடையமகாவிஷ்ணுவும் தாமரைமலரிலுதித்தபிர்மாவும்தேடுதற்கரிய பெருமானும் ரிஷபவாகனத்தின்மேலேறும் மகாதேவனும் மான்மழுவோடும் காலகாலனுமாகி அருணாசலக்கடவுளதுமெய்யடியார்களைக்கண்டு துதிப்பவர்களுக்குத் துயரமுண்டோ இல்லை-எ-று.

துயர்கொண்டு நாளுந் தொலையாப் பிறப்பி
லயர்கின்ற நாயேற்கு மாமோ-வுயர்தவத்தோ
ராரும் பரவு மருணேச ரம்புயத்தாள்
சேருங் கருத்தொருக்காற் செப்பு.

(இ-ள்.) துன்பத்தைக்கொண்டு எந்நாளுமழியாத பிறவிக்கடலிலே அலைகின்ற அடியேனுக்கு அக்கடலை நீந்திக்கரையேறுதல் உண்டாமோ மிகுந்ததபோதனாகளால்துதிக்கும் அருணாசலக்கடவுளே உமதுபாதாரவிந்தங்களை அடையும்நெறியை ஒருதரஞ்சொல்லும்.

செப்பரிய மால்பிரமர் சிந்தைதனக் கெட்டாத
வப்பரிய சோணகிரி யப்பனே-எப்பொழுதும்
பெண்ணைவிட்டு நீங்கா நின் பேரழகு சந்ததமென்
கண்ணைவிட்டு நீங்காது காண்.

(இ-ள்) சொல்லுதற்கரியமகாவிஷ்ணுவாலும்பிர மதேவனாலும்நினைத்தற்கரிய பெரியஅருணாசலக்கட வுளே எப்போதும்மலைகளைவிட்டுநீங்காத தேவரீது பேரழகு எக்காலமும் அடியேனது இரண்டுகண்களை யும் விட்டுநீங்காது-எ-று. (கூஅ)

காணா ரரிபிரமர் கஞ்சமலர்த் தாளிணையை
நாணமற் றுன்காண நாடியே-சேணுட
ராயும் புகழருணை யண்ணா மலையானே
மாயுந் தமியேன் மனம்.

(இ-ள்.) தேவலோகத்தோரால் தோத்திரஞ்செய் யு அருணாசலக்கடவுளே மகாவிஷ்ணு பிரமதேவன் இவர்களேதேவரீரடிபாதாரவிந்தத்தைகாணார் அதை சாஸ்திரங்களாலரிந்தும் புல்லறிவனாகிய யான்காண நாடியதால் எளியேன்மனம் விசாரப்படுத்தும்-எ-று,

மனத்திற் பயமறிந்து மாமுனிவர்க் காகச்
சினத்திற் புரமெரித்த சீமா-னனத்தனரு
டக்கன் றலையறுத்த தாணு வருணகிரி
நக்கன் றனைமனமே நம்பு.

(இ-ள்.) முனீஸ்வரர்களும்தேவர்களும்முபபுராதி களால் துன்பப்படுவதையறிந்து கோபமுற்று மூப்புற த்தையெறித்த தயாபரன்தக்கன் தலையைபறிந்த அரு ணகிரிநாதன் மனமேநமக்குத்துணையென்றுநம்புவாய்.

நம்பியிரு நெஞ்சமே நாளு மருணகிரி
யும்பர்கோ னன்றுரைத்த வுண்மையை- நம்பிக்
கெடுத்தாலுஞ் சோணேசன் கேடுபடா தெம்மை
யெடுத்தாலுஞ் சோணேச னென்று.

(இ-ள்.) அஞ்ஞானம் பொருந்திய என்மனமே நீஎப்போதும் நம்பியிருப்பாய் நான்கு வேதங்களும்

அருணசலக்கடவுளே தேவரென்றுசொல்வது உண்மையே நீநமபியிருந்தால்நம்மைக்கெடுத்தாலும் அல்லது கேடுராமல் இரட்சித்தாலும் சோணேச னென்று சொல்வாய்- எ-று. (௬௧)

என்றுதரு வாய்மகிழ்ந்தே யான்பெருவதெந்தநா
ளின்று தமியேற் கியம்பிடாய்-நன்றிதரு
மேகனே சோணகிரி யீசனே சேவேறும்
வாகனே சாகா வரம்.

(இ-ள்.) நன்மையைத்தரும் ஏக்வஸ்துவான அருணசலக்கடவுளே ரிடபவாகனமேருங் கர்த்தனேநீர் எனக்கு அழியாவரம்என்றைக்குக்கொடுப்பீர் மூடனுகியயான் என்றைக்குப்பெறுபவன் இப்போது அடியேனுக்குச்சொல்வீர்-எ-று. (௬௨)

சாகா வறம்பெறலாஞ் சந்ததமுஞ் சோணகிரி
நாகா பரணன்ரு ளடியே-ஏகாந்த
நண் ணுமக்க மாலைகொடு நாவார வைந்தெழுத்தை
யெண் ணு மறவா தெடுத்து.

(இ-ள்.)என்றைக்கும்சாகாவறம்பெறலாம்அதெப்படியெனில்நாகங்களை ஆபரணமாகப்பூண்ட அருணசலக்கடவுளது பாதாரவிந்தத்தைஎப்போதும்நம்பி ஏகாந்தமாக உருத்திராட்சமாலையைக்கொண்டுநாவினல் பஞ்சாக்ஷரத்தை மறவாமல்செபித்தல்-எ-று. (௬௩)

எடுத்த பய னை யிருவி னையை யெண்ண
ரடுத்தசிவ பூசை யறியார்-தொடுத்த
நெரியாகுஞ் சோணகிரி நித்தரடி யாரை
யறியாத மானிடவ ரச்சு.

(இ-ள்.) இந்தஜெனனமெடுத்த பயனையும் நல்வினைதீவினையென்னும்இருவினையையும் நினையார்நெருங்

இச்சிவபூசையுஞ்செய்யார் நல்லநெறிமிகுந்த அருணசலக்கடவுளினதுமெய்யடியாரையும் அறியார் மானிடரென்றுஞ்சொல்லுமௌடீகர்-எ-று. (௨௪)

அச்செல்லா மொன்று வதிலே யிருவகையா
வைச்சதென்ன சோணகிரி வல்லளே-இச்சையிலே
வாழ்ந்துசில பேரிருக்க வாய்புதைத்துக் கைகட்டித்
தாழந்துசில பேரிருக்கத் தான்.

(இ-ள்.) அக்கினிஸ்வரூபம்பொருந்திய அருணசலக்கடவுளேசகலமானிடரையும் ஒருஅச்சினுல்சிருட்டித்து அதில்இரண்டுபிரிவாகப்பிரித்துசிலர்,தங்களிஷ்டபாக்கியங்களை யனுபவித்துவாழ்ந்து கொண்டிருக்கவும் சிலர்தரித்திரனுய்மெலிந்துவாய்மூடி கைகட்டிக்கொண்டுவாழ்வை யுடையவர்களுக்குத் தாழ்ந்துபணிவிடை செய்யவும் அமைத்ததென்ன-எ-று. (௨௫)

தானே யுலகுடையோன் றன்னசைவே பல்லுயிர்க்குந்
தானே யனைவர்க்குந் தாதைதாய்-தானே
யனைத்துயிருங் காக்குமருணேச னென்றுன்
மனத்துயரம் போவதே மாண்டு

(இ-ள்.) நானேவுலகங்களிலெல்லாநிறைந்தவன் என்னசைவேசராசரமுதலியசகலஜீவராசிகளுக்கும் நானேஎல்லோருக்கும்தந்தைதாய் நானே சகலசீவசெந்துக்களையும்காக்கும் அருணசலக்கடவுளென்றுசொல்லியகர்த்தனை தியானித்தால் மனத்தின் கண்ணுண்டாகிய துக்கமானது நாசமாய்ப்போம்-எ-று. (௨௬)

மாண்டு பிறந்துழலு மாப்பிணியை நீக்குதற்கு
வேண்டு மருந்துனக்கு வேண்டிணு-லீண்டுலகில்
விணேசர் சொல்லே விரும்பாம னெஞ்சமே
சோணேச னென்றொருக்காற் சொல்.

(இ-ள்.) மூடத்துவம்பொருந்தியஎன்மனமேஇற ந்தும்பிறந்துமுழலப்பட்ட கொடியவியாதியை நீக்கு தற்குதகுந்தமருந்து உனக்குவேண்டியிருந்தால் இவ்வு லகத்திலிருக்கும் வீணானதெய்வங்களைக்கருதாமல்அரு ணாசலக்கடவுளேயென்று ஒருதரஞ்சொன்னால் அது வேநல்ல மருந்தாம்-எ-று. (௪௭)

சொல்லரிய நால்வேதஞ் சொன்னபடி யேகருதி
நில்லரிய பூசையிலே நேசமா-வெல்லரிய
நஞ்சே தரித்தருளு நாதரடித் தாமரையை
நெஞ்சே மறவாம னீ

(இ-ள்) துன்பத்துக்கிடமாகிய எனதுநெஞ்சமே சொல்லுதற்கரிய நான்குவேதங்களும் முறையிட்டது போலவே நினைத்துஅரிதாகியசிவபூசையிலேபக்தியோ டிருந்து வெல்லுதற்கரியவிஷத்தைக்கண்டதிற்றரித்த அருணாசலக் கடவுளது பாதாரவிந்தத்தை மறவாமல் நினைந்துகொண்டிருப்பாய்-எ-று. (௪௮)

நீயே வரல்வேண்டு நின்னைப்போ லானதுணை
நாயேனுக் கியாருண்டு நாடுங்காற்-றூயகமா
மண்ணா மலைமேவு மப்பனே யென்பிறவிப்
புண்ணா மலையகற்றும் போது.

(இ-ள்.) அருணாசலத்தில்வசிக்கும் அப்பனேயெ ன்பிறவி நோயாகிய மலையைநீக்கும்போது நீயேவந்து இரட்சிக்கவேண்டும் நினைக்குமிடத்தில் உம்மைப்போ லே ஆதரவாகிய துணை அடியேனுக்குயாருண்டுஇல்லை.

போதுமதி சூடும் புனிதர் புவியீன்ற
மாதுபங்க ரண்ணா மலைநாதர்-பாத
மிறுகப் பிடிமனமே யெந்நாளு நின்னைக்
குறுகப் பயப்படுமே கூற்று.

(இ-ள்.) இளஞ்சந்திரனை சடாமகுடத்திற் றரித்த வரும் பூலோகத்தைப்பெற்றமாதாவாகிய பார்வதியை இடப்பாகத்தில்வைத்தவருமாகிய அருணசலங்கடவுளதுபாதாரவிந்தங்களை மனமே நீகெட்டியாகப்பிடிக்கூற்றுவனென்னுநமன்எப்பொதும்உன்னிடத்தில்நெருங்கப்பயப்படுவான்-எ-று. (ருய)

கூற்றிருக்கு முன்காலிற் கூறு புறங்காலி [யி
லேற்றிருக்கு மாயவன்க ணெப்பொழுதுஞ்-சாற்றுகை
லம்புயத்தோன் கம்பிருக்கு மண்ணு மலைநாதன்
செம்புயத்திற் காரிணையாஞ் செப்பு.

(இ-ள்.) எமதருமராஜன் மார்க்கண்டநிமித்தமுதைத்தலால்அவன்முன்காலில்விழுந்துகிடப்பான் புறங்காலில்மகாவிஷ்ணுவானவர்சக்கரயுதம்பொருட்டுதினம்தினம் நூறுதாமரைபுட்பங்கொண்டுஅர்ச்சிக்குநாளில்ஓர்நாள்அவர்பத்தியைச்சோதிக்கும்பொருட்டுஓர் புட்பத்தைமறைத்ததால் அந்தப்புட்பத்திற்குப் பதிலாகச்சாற்றியமகாவிஷ்ணுவின்துகண்ணிருக்கும்சொல்லுதற்கரியகரத்தினிடத்தில்தாமரைமலரிலுதிற்றபிரமன்தனக்கு ஐந்துசிரசென்று கர்வங்கொண்டதையறிந்து கிள்ளியசிரமிருக்கும்இவ்விதபெருமையையுடைய அருணசலக்கடவுளுக்குச் சமான்மானவர் யார்மனமே நீ சொல்லுவாய் எ-று. (ருக)

செப்பரிய ஞானச் செழுஞ்சுடரே சோணகிரி
யப்பேன நன்னூ லறிந்தாலு-மிப்புயிற்
கொண்டகுரு வைப்பொருளாக் கொள்ளார்பயனேது
கண்டவெல்லாம் வீணிலே கற்று.

(இ-ள்.)சொல்லுதற்கரிய ஞானத்தின்பொருளாகிய அருணசலக்கடவுளே உம்து ஆகமசாஸ்திரங்களை

பழுதரக் கற்றாலும்இப்பூவுலகின்கண் தங்களை அடிமையாகக்கொண்ட ஞானாசிரியரைப்பொருளாகக்கொண்டு கரையேறாதவர்கள் பலசாஸ்திரங்களைக்கற்றும்வீணாவதன்றிப் பயன்பெறா-எ-று. (ருஉ)

கற்றதனாற் றொல்லைவினைக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதனாற் போமோ பிறவிநோ-யுற்றகட
னஞ்சுகந்து கொண்டருணை நாதரடித் தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி.

(இ-ள்.) பலசாஸ்திரங்ககளைற்றதனால் முன்சனனத்திற்செய்தகொடியவினைதம்மைவிட்டுநீங்குமோ நல்ல உயர்ந்தகுலத்திற்பிறந்தால்பிறவியென்னும் அவ்வியாதிநெருங்காமல்போமோ திருப்பாற்கடலிலுதித்த விஷத்தை விருப்பத்தோடுண்ட அருணாசலக்கடவுளது பாதாரவிந்தத்தைமெய்யன்போடுதுதித்து வணங்காமல்.

நெறியுண்டா நல்ல நிலையுண்டா ஞானக்
குறியுண்டா மெண்ணமெலாங் கூடுஞ்-செறிவுண்டா
மாதி யருணகிரி யண்ணலா ரைந்தெழுத்தை
யோதிமட நெஞ்சமே யுன்.

(இ-ள்.) அஞ்ஞானம் பொருந்திய என்மனமே ஆதிமுதலாகிஅருணாசலக்கடவுளது பஞ்சாட்சரத்தை பக்தியுடனேசெபித்தால்பிறவிநல்லநெறியும்அழியாதபதவிஞானபிரகாசமும்உண்டாம் நினைத்தகருமங்களெல்லாம் விக்கினமின்றி முடியும்-எ-று, (ருச)

உன்னக் கருத்துண் டுரைப்பதற்கு நாவுண்டு
பன்னச் சிவநூல் பலவுண்டு-முன்னமறைக்
கெட்டாத சோணகிரி யீசரிருதாள் பணிய
வொட்டாது பாவ முயர்ந்து.

(இ-ள்.) நினைப்பதற்குக்கருத்தும் துதிசெய்ய நாவும் வாசிக்கச்சிவபுராணங்கள்பலவும்தடையில்லா திருந்

துங் நான்குவேதங்களுக்குமெட்டாத அருணசலயீச
னது இரண்டுபாதங்களையும்வணங்கித் துதித்துநற்கதி
யடைய வொட்டாமல் முன்செய்த கொடியவினையெதி
ரில்நின்று தடுக்கும்-எ-று, (ருரு)

உயர்ந்தவர்க்கு ளெல்லா முயர்ந்திருக்குங் கோவே
நயந்தபுகழ்ச் சோணகிரி நாதா-பயந்தமர
ருண்ணப் படாநஞ்சை யுண்டவுன்னைச் சாமவரோ
டெண்ணப் படுவா ரிதென்.

(இள்-.) உயர்ந்தபொன்னுலகத்தின்கண்வசிக்கும் தேவர்களுக்கு அரியதெய்வமாகிய தேவாதிதேவனே சகலசீவசெந்துக்களையும்இரட்சித்துப்புகழ்பெற்றஅருணசலக்கடவுளே தேவர்களெலாம்பயந்து முறையிட்டகாலத்தில்உண்ணுதற்கரியவிஷத்தைவிருப்புடனேயுண்டதேவரீரைஇறந்துபோம்தேவர்களுக்குச்சமமாக நினைப்பார் இதுஎன்ன அதிசயம்-எ-று. (ருசு)

என்ன சனன மெடுத்தார் புவிமீதி
லன்னமிடா ரின்சொல் லறிகிலார்-முன்னமே
யொன்னார் புரமெரித்த வுண்ணா முலைபாக
வென்னார் திருநீ றிடார்.

(இ-ள்.) இவ்வுலகத்தின்கண்ணுள்ள மனிதர்சனனமெடுத்தார் அன்னதானஞ்செய்யார்பிறருக்கு விருப்பத்தைகொடுக்கும்நல்லசொற்களையுஞ்சொல்வார் முன்னேதேவர்களுக்குப்பகைவராகியதிரிபுரத்தாரை எரித்தஉண்ணாமுலை யம்மையினதுஇடப்பாகத்திலுடையவனேயென்றுஞ்சொல்வார்வெண்மைபொருந்தியதிருநீருமணியார்-எ-று. (ருஎ)

நீறிடே னந்தெழுத்தை நேசமுட னேகருதிக்
கூறிடே னென்னையுமாட் கொள்வதனுக் காறணிந்த

வேணியார் சோணகிரி வித்தகனூர் வெற்றிமழுப்
பாணியார்க் கன்றோ பரம்.

(இ-ள்.) திருநீறுந்தரியேன் பஞ்சாட்சரத்தையும் பக்தியுடனே நினைந்து ஜெபியேன் அப்படிப்பட்ட அறிவீனனாகிய என்னையும் அடிமைகொண்டு இரட்சித்தருளுதற்குகங்கையைத்தரித்தசடாமகுடத்தையுடையவரும் மான்மழுதரித்தவருமாகிய அருணாசலக்கடவுளுக்கல்லவோ பாரம், எ-று. (ருஅ)

பரகதிக்கு வித்தாமுன் பஞ்சாக்கரத்தைப்
பரபரப்ப வெண்ணாத பாவ-நரகப்
பிறப்பிற்கு மீடாப் பிறந்தருணை யீசா
விறப்பிற்கு மீடாயி னேன்'

(இ-ள்.) மெய்யறிவை யுடையவர்கள் துதிக்கும் அருணாசலக்கடவுளேபரகதியென்னும் மோட்சத்திற்கு வித்தாகிய எனதுபஞ்சாட்சரத்தைபக்தியுடனே ஜெபியாதபாவத்தினால் நரகமென்னும்பிறப்பிற்குஈடாகப்பிறந்து இறப்பிற்குஞ் சமமானேன். எ-று. (ருகூ)

ஏனிருந்து நெஞ்சே யிரவுபக லாயுடலைத்
தானொறுப்பாய் சோணகிரித் தானாவா-மானுகந்த
வெந்தையா னீங்கு மிருவினைநோய் சிந்திக்குஞ்
சிந்தையால் வேறென் செயல்.

(இ-ள்.) மூடத்துவம்பொருந்திய எனதுநெஞ்சமே நீயேன் இரவுபகலுமாக ஒழியாமல்சரீரத்தைநிந்திக்கிறாய் மான்மழுதரித்த அருணாசலக்கடவுளாகியஎன்னப்பனால் நல்வினை தீவினையென்னுமிருவினையாகியநோய்நம்மைவிட்டகலும் அந்தயீசனைத்துதியாமல் சரீரத்தைநிந்தித்தால் பிரயோசனமென்ன எ-று.

என்செயலாஞ் சோணேச ரிட்டபடி யேயொழிய
நெஞ்சையெலாம் புண்ணா நினைந்தாலு-மிஞ்ச

வருமோ பெருவாழ்வு வல்லமையா னெஞ்சந்
தருமோ நம்பேராசை தான்.

(இ-ள்.) நம்மாலே என்னசெய்யலாம் அருணாச லக்கடவுளமைத்த கட்டளையின்படியல்லாமல் மனது புண்ணாகக்கவலை கொண்டாலும்நமது வல்லமையினால் மிகுந்தவாழ்வுவருமோ மனமானது பேராசையின்படி யேகொடுக்குமோ எ-று. (சுக)

தானே யெனக்குத் தவமாய்த் தவப்பயனுய்த்
தானே யெனக்கன்னை தாதையாய்த்-தானென்னைச்
செப்பரிய நின்பாதஞ் சேர்விக்குஞ்சோணகிரி
யப்பனே நீயேறு மான்.

(இ-ள்.) அந்தரவாசிகள் துதிக்கும் அருணாசலக் கடவுளே தேவரீர் இடப்பாகத்திற்றரித்த பார்வதியெ ன்னுமானே எனக்குதவமும் தவத்திற்பெறப்பட்டபே ரும் தாய்தந்தையுமாகச் சொல்லுதற்கரிய உன்பாதத் திர்சேர்க்கும்-எ-று. (சுஉ)

ஆனவர நல்குநதி யாயிரஞ்சென் றாடிலென்
றூனம் பதினாறுந் தான்செயினென்-ஞானங்க
ளஞ்சுடையான் சோணகிரி யண்ணறனை யெண்ணாத
நெஞ்சுடையார் பூதலத்தே நின்று.

(இ-ள்.) சத்தியோசாதனம் வாமனம் அகோரம் தம்புருஷம்ஈசானியம் என்னுமைந்துமுகத்தை யுடைய அருணாசலக்கடவுளை பக்தியோடு துதியாநெஞ்சையு டையவர்கள் இப்பூவுலகின்கண் வேண்டியவரங்களைக் கொடுக்குங் கங்கையொத்த ஆயிரநதிகளிற்சென்றுஸ் நானஞ்செய்தாலும் முப்பத்திரண்டு தருமங்களையும்வ ழுவாமல் நடத்தினாலும் பிரயோசனமென்ன ஒன்று மில்லை எ-று. (சுந)

நின்று தவம்புரியாய் நெஞ்சே திருக்கோயில்
சென்றுசிவ பூசையறஞ் செய்திடாய் வென்றிதரு
மம்மான் கரத்த னருணேச னம்புயத்தாள்
சும்மா கிடைக்குமோ சொல்.

(இ-ள்.) அஞ்ஞானம் பொருந்திய என்மனமே நீ யோரிடத்தில் நின்று தவமுஞ்செய்யாய் சிறப்புப் பொருந்திய ஆலயத்திற்சென்று பூசைசெய்து சிவதருமத்தையும் நடத்தாய் அப்படியிருக்க வெற்றியைக்கொடுக்கும் அழகியமானைக் கரத்தாலேந்திய அருணசலக்கடவுளது தாமரை யொத்தபாதம் சும்மாகிடைக்குமோ சொல்வாய். எ-று (சஉ)

சும்மா கிடைக்குமோ சோணசலன்பாத
மம்மால் விரிஞ்ச னறிகிலார்-நம்மா
லிருந்துகதை சொன்னக்கா லென்னகு நெஞ்சே
பொருந்த நினையாத போது.

(இ-ள்.) மனமேபல ஆசையை நீக்கி ஒரு நிலையில் நின்று துதிக்காமல் அருணசலக்கடவுளது திருப்பாதம் சும்மா கிடைக்குமோ அந்தப் பிர்மாவும் விஷ்ணுவும் அநேககாலந்தேடியும் அறியார் நாம் கிடைக்குமென்று செருக்கினுல் கதைசொல்லுதலால் என்னபிரயோசனம்-எ-று. (சரு)

போதையிரு பல்லுகுத்துப் புண்டரிகன் றேவியெனு
மாதையன்று மூக்கரிந்த மாவீரன்-ருதை
விருப்பா மதிசூடி வெண்டலையோ டேந்தி
யிருப்பா னருணேச னின்று.

(இ-ள்.) தக்கனுடைய யாகத்தில் சூரியனுக்கு இரண்டு பல்லுதிர்த்தும் புண்டரீகமென்னும் தாமரைமலரிலுதித்த பிர்மாவின் தேவியாகிய சரஸ்வதியை மூக்

கறித்தும் பேர்பெற்ற வீரபத்திராது தந்தையாகிய அருணுசலக்கடவுள் விருப்பத்துடன் இளஞ்சந்திரனை சடையிற்றரித்தும் பிர்மகபாலத்தை கையிலேந்தியுமி ருப்பார்-எ-று. (சாசா)

இன்றைக்கு நாளைக் கிரவிற் கெனுந் துயர
மென்றைக்குப் போமருணை யீசனே-கொன்றமதி
புன்னை யெருக்கும் புனையுஞ் சடாடவியா
யென்னை நெருக்கு மிவை.

(இ-ள்.) அருணுசலக் கடவுளே கொன்றைமாலை யையும் புன்னைமாலையையும் எறுக்கமாலையையும் சந்தி ரனையும் சடா மகுடத்திற் றரித்தவரே இன்றைக்கும் இராத்திரிக்கும் வேண்டும் நாளைக்குவேண்டுமென்னும் சமுசார துக்கம் நெருங்காமலென்னைவிட்டு என்றை க்கு நீங்கும்-எ-று. (சாஎ)

நெருக்குமிவை யென்னுயிரை நீங்காமற் சூழ்ந்தே
யிருக்கும பலபிணிநோ யெல்லா-முருக்கும்வகை
கண்டே னருணேசன் கஞ்சமலர்த் தாள்கருத்திற்
கொண்டே னெனக்கென் குறை

(இ-ள்.) என்னைவருவித்து மனைவியையும்என்னு யிரைவிட்டு நீங்காமல் சூழ்ந்திருக்கும் கொடியவியாதி களையும் அகற்றும் வகையறிந்தேன் அருணுசலக் கட வுளது பாதாரவிந்தத்தைகருத்திற்கொண்டேன் இனி எனக்கென்னகுறை-எ-று. (சாஅ)

குறையேது மில்லையினிக் கூறுங்கால் வானோர்க்
கிறையாகுஞ் சோணேசற் கென்று-மறைபுகுந்தேகம்
பற்றி நமன்றொடரான் பார்க்குங்கா னெஞ்சமே
வெற்றிநமன் கைத்தலத்து வேல்.

(இ-ள்.) மூடத்துவம் பொருந்திய மனமே சொல் லுமிடத்தில் நமக்கு யாதொரு குறைவுமில்லை தேவர்க

ளுக்குத் தேவனுகிய அருணுசலக்கடவுளுக்கென்று சரீ ரத்தை நியமித்துச் சரணமடைந்தோம் எமதருமன் நம்மைப்பற்றி நெருங்காமல் அவன் கரத்திலிருக்கும் சூலாயுதத்தையுஞ் செயித்தோம்-எ-று. (சுகூ)

வேலைவிட முண்ட விமலரரு ணேசர்கொன்றை
மாலையணி மார்பர் மலர்ப்பதத்தை-மேலமரர்
பண்ணினுர் பூசையலம் பண்ணிப் பரகதியி
னண்ணினு ரெல்லா நலம்.

(இ-ள்.) திருப்பாற் கடலிலுதித்த விஷத்தையுண் டவரும் கொன்றைமாலையைத் தரித்தமார்பையுடைய வருமாகிய அருணுசலக்கடவுளது பாதாரவிந்தங்களை பூசைசெய்து தேவர்கள்முதலியசகலரும் நற்கதியடை ந்தார்கள்-எ-று. (எ0)

எல்லா பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தேநஞ் சோணேச-ரில்லிற்
பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்
டிறந்தகதை யுங்கேட்டி லேம்.

(இ-ள்.) உலகத்தின் கண்ணுள்ளவருடைய பிற ப்பு மிறப்பு இயலிசை யென்னும் இலக்கணங்களையறி ந்த வித்வான் சொல்லிய ஆகமசாஸ்திரங்களினுலறிந் தோம் நமது அருணுசலக்கடவுள் ஒருவர் வீட்டிலே யும் பிறந்தாரென்கிறதையுங் கேட்டிலேம்-எ-று, ()

ஏமாந்த சோணகிரி யீசரடி யாரடிக்கே
பூமா மலர்தூவிப் போற்ருதார்-தாமென்றும்
வெஞ்ச மனத்திருக்கும் வேடராய் நாடோறும்
வஞ்சநம னுக்கஞ்சு வார்.

(இ-ள்.) ஒய்யாரத்துடனே திருவண்ணுமலையில மர்ந்த ஈஸ்வரரது அடியார்களுடைய பாததாமரைக

ளில் நல்லபுட்பங்களைச்சாற்றித் துதித்து நற்கதியடை யாதவர் எப்போதுங்கொடிய மனத்துடன்ஊனைப்பெ ருக்கிய வேடராம் வஞ்சனையுடைய இயமனுக்குத்தி னம் பயப்படுவார்-எ-று. (எஉ)

வஞ்சநம னுக்கஞ்சி வாடுந் தமியேனை
யஞ்சலென்ற சோணகிரி யண்ணலே-நெஞ்சறிய
வாண்டகுரு நீயென் றறியாதார் செய்ததவ
மாண்டமரத் திற்கணைத்த மண்.

(இ-ள்.) வஞ்சகனாகிய இயமனுக்குப்பயந்து சோர்வடையும் எளியேனைப் பயப்படாதேயென்று அபயஸ்தங்கொடுத்த அருணாசலக்கடவுளேமனமறிய இரட்சிக்குங் குருதேவரீர் அறியாதவர்செய்ததவமான துபட்டுப்போன மரத்திற்கு அணைந்தமண்போல வியர்த்தமாம். எ-று. (எ௩)

மண்ணிற் பிறந்திறந்து மாயுந்தெய் வங்களோ
டெண்ணப் படாவருணை யீசனே-விண்ணப்ப
மொன்றுண் டடியே னுனைப்பிரியா தேயிருக்க
வென்று தருவா யெனக்கு.

(இ-ள்.) இப்பூவுலகின்கண்பிறந்துயிறந்துபோம் தெய்வங்களுக்குச் சமமாக எண்ணப்படாத அருணாசலக்கடவுளே ஒரு விண்ணப்ப முண்டதென்னவெனில் அடியேன் தேவரீரது பாதாரவிந்தங்களைவிட்டு நீங்கமலிருக்க வரந்தருவீர்-எ-று. (எ௪)

தருவா யெனக்குகந்துன் றன்னிருதா டன்னை
மருவார் புரமெரித்த மன்னா-குருவாகி
முன்னை வினையகற்றி மூர்த்தி யருணேச
வென்னைப் பொருளா வெடுத்து.

(இ-ள்.) அருணாசலத்தில் வசிக்குங்கர்த்தனேஎன் பேரில் ஆசைவைத்து விரந்தருவர் உமது இரண்டுபாதங்களையு வணங்கித் துதியாத திரிபுரத்தாரை எரித்த தேவதேவனே தேவரீர்குருவாகவந்து யான்பூர்வத்திற்செய்த கொடியவினை யகற்றி என்னை ஒருபொருளாய் மதித்து ரட்சியும்-எ-று. (எரு)

எடுப்பானுங் காப்பானு மேற்பானு மேற்பக்
கொடுப்பானு மேதுங் கொடானும்-விடப்பானம்
பண்ணி யனேகர் பயங்கெடுத்த சோணகிரிப்
புண்ணியனே நீகாணிப் போது.

(இ-ள்.) அடியார்களே ஒரு பொருளாகமதித்து சிருஷ்டிக்கிறவனும் நீயே சிருஷ்டித்துஇறட்டிக்கிறவனும் நீயே ஒருவனிடத்திற்போய் யாசிக்கச்செய்கிறவனும் நீயே யாசிப்பவனுக்குகொடுப்பவனும் நீயேலோபத்தனமாய் ஒன்றுங்கொடாதவனும் நீயே விஷத்தைப்புசித்து அனேகம்பேருடைய பயத்தைக்கெடுத்து இரட்சித்த அருணாசலக் கடவுளே புண்ணியஸ்வரூபனேஎல்லாவிஷயங்களுக்குகாரணம்இப்போதுதேவரீர்தான்-எ-று. (எகூ)

இப்போது பின்னைக் கிலையென் றிரப்போரை
யெப்போதுந் தள்ளா திரங்கியே-முப்போதும்
பூசிப்ப தெந்நாள் புனிதனே சோணகிரி
நேசிப்ப தெந்நா ணினைந்து.

(இ-ள்.) இப்போதைக் கில்லை பின்னைக்கில்லை யென்று யாசிப்பவர்களை எப்போதும் நீங்காமல்மனதிறங்கிஇரட்சிக்கும்அருணாசலக்கடவுள்தேவரீரையடியேன் மூன்று காலங்களும் விடாமல் பூசைசெய்வதென்றுள்.

நினையேன் றிருக்கோல நின்றுகண்ணீர் சோர
நனையேன் பிறப்பறுக்க நாடேன்-புனையேனின்
பொன்னடிக்குப் பூமாலை போற்றியருணேச
பின்னடிக்கிங் காருதவும் பேர்.

(இள்-.) தபோதினர்கள் துதிக்கும் அருணாசலக்கடவுளே புல்லறிவனாகியயான்உம்மை நினையேன் தேவரீரது ஆலயத்திற்குவந்து நின்று இரண்டுகண்களிலும் சலம்பெறுக அதனால் நினையேன்பிறப் பென்னும்வலையை அறுக்கவும் நாடேன் உமதுபொன்போன்றபாதங்களுக்கும் புட்பமாலை சாற்றித்தோத்திரஞ்செய்வேன்இவ்விதமௌடீகபுத்தியையுடைய எனக்கு இறக்குங் காலத்தில் உதவிசெய்கிறவர்கள் யார்-எ-று. (எஅ)

பேரா யிரமுடைய பெம்மானைச் சோணகிரி
யாரா வமுதை யறியாமல்-வாராது
தீது நலமுந் தெரியுகா னெஞ்சமே
யேதுமவ னென்றே யிரு

(இ-ள்.) ஆயிரநாமத்தையுடைய அருணாசலக்கடவுளைத்தெவிட்டாத அமுர்தத்துக்கொப்பானவரையறியாமல் நன்மையும் துன்மையும்உண்டாகாதுநெஞ்சே சகலமும் அவனென்றே யெண்ணியிருப்பார்-எ-று. ()

இருந்துநினைப் பார்த மிருவினையை நீக்கும்
பொருந்துமிடி யிம்மையிலே போக்கு-மருந்தன்றோ
தம்பிரா னெவ்வுயிர்க்குந் தாணு வருணகிரி
யெம்பிரா னோரஞ் செழுத்து.

(இ-ள்.) மவுனமாகநின்று சேவிப்பவர்களுடைய நல்வினை தீவினையென்னுமிரண்டையும் நீக்கும் இப்பிறப்பிற்பொருந்திய தரித்திரத்தையும் போக்கும்மருந்

தல்லவோ சகலஜீவ செந்துக்களுக்கும் கர்த்தனாகிய அருணாசலக்கடவுளது பஞ்சாட்சரமென் னும்ஐந்தெழுத்து-எ-று. (அ௰)

அஞ்செழுத்தை யோதுமவர்க் கஞ்சி யவர்தலையிற்
றஞ்செழுத்தைக் கஞ்சன் றுடைக்குமே-யஞ்சுதலைக்
கொன்றறுத்து நாலா வொருகுறையா நின்றதலை
யின்றறுப்பான் சோணேச னென்று.

(இ-ள்·)தாமரை மலரிலுதித்த பிரமதேவன் ஐந்தெழுத்தென்னும் பஞ்சாட்சரத்தை ஜெபிப்பவர்களுக்குப் பயந்து அவர்தலையி லெழுதிய இரப்பெழுத்தைக்கலைத்து விடுவன் அதேனெனில் நமக்குமைந்துதலை ஈஸ்வரருக்கு மைந்துதலை யென்று கெர்வங்கொண்டதால் கோபித்துமுன்னிருந்த ஐந்துசிரசில்ஒருசிரசை யறுத்த அருணாசலக்கடவுள் இப்போதிருக்கும் நான்குசிரசையும் இன்றைக்கருத்தெரிவாரென்று நினைத்து எ-று, (அக)

என்றுநமன் றூதுவரை யேற்கவே தானழைத்து
நின்றுரைக்குஞ் சோணகிரி நித்தனார்க்-கின்றடிமை
யானவர்க்கு நீர்வணங்கி யப்பாலே போமென்று
தானவர்க்குப் புத்தியாத் தான்.

(இ-ள்.) எப்போதும் இயமதருமராசன்தனதுதூதர்களையழைத்து எதிர்நின்று அருணாசலக்கடவுளுக்கு அடிமையானவர்களைக் கண்டால் நீங்கள் அவர்களைவணங்கித்துதித்து அப்பாற் போங்களென்று புத்திவரும்படிசொல்வான்-எ-று. (அஉ)

புத்திதருஞ்சோணேசன் பொன்னடியைவாழ்த்துநர்க்
பத்திதருமெய்ஞ்ஞானம் பாலிக்கு-முத்திதரும் [குப்

மாற்றரிய தீவினையை மாற்றுவிக்கு மைந்தெழுத்தைப்
போற்றரிய நெஞ்சமே பூண்டு.

(இ-ள்.) அருணசலக் கடவுளது பொன்போன்ற பாதங்களைத் துதிப்பவர்களுக்கு நல்லபுத்தியும் தெய்வ பத்தியும் மெஞ்ஞானமும் மோக்ஷமுங்கொடுக்கும்வெல்லுதற்கரிய தீவினையை நீக்கும் ஆகையால் துதித்துநற்கதியடைதற்கரியாத எனதுநெஞ்சமே பஞ்சாட்சரத்தைமறவாமற்ஜெபித்து தோத்திரஞ்செய்வாய்-எ-று.

பூண்டவகைக் கெல்லாம் பொருந்துமணி முத்திருக்க
வேண்டும் பசும்பொன் விளைவிருக்கத்-தீண்டாமற்
பொங்கரவுந் தோலெலும்பும் பூண்டாயி தென்னரு [ணைச்
சங்கரா கங்கா தரா.

(இ-ள்.) ஆபரணமாக அணிவதற்கிசைந்த ரத்தினங்களும் முத்துகளும் அதற்குவேண்டியபசுமைபொருந்தியபொன்விளைவுமிருக்க அவைகளையணியாமல்விஷத்தையுண்டபாம்பும் புலித்தோலும்எலும்பும் ஆபரணமாகத்தரித்தாய் இதுவென்ன திருவண்ணமலையில் வசிக்குங்கர்த்தனே கங்கையைச் சடாமகுடத்திற்றரித்தவனே சொல்வீர்-எ-று.

கங்கா தரனே கடையேனை யெந்தநா
ளங்கா தரவா வழைக்குநா-ணங்காதல்
பார்க்குநாள் சோணேச பார்த்துப் பரகதியிற்
சேர்க்குநா ளெந்தநாள் செப்பு.

(இ-ள்.) அருணசலக்கடவுளேகங்காதரனேகடையேனாகியஎன்னைஆதரவோடு அழைத்து உமதுபாதத்திற் சேர்க்குநாள் எந்நாள் என்னுடைய விருபத்தை யறிந்துபரகதியென்னும் மோட்சத்தை கொடுக்குநாள் எந்தநாள்சொல்வீர்-எ-று. (அந)

செப்பரிய வாணவத்தைச் சேதமுறு மும்மலத்தை
யொப்பிலாச் சஞ்சிதத்தை யோட்டினே-னிப்போ
தருவாகி நின்ற வணகிரி யானைக்
குருவாக வென்னுளத்தே கொண்டு.

(இ-ள்.) சொல்லுதற்கரிய ஆணவம்மாயைகாமிய மென்னுமும்மலத்தையும் இணையில்லாத சஞ்சலத்தையும் இப்போது என்னைவிட்டு நீக்கினேன் எப்படியெனில் அருவுருவாகயிருக்கும் அருணாசலக்கடவுளைகுருவாகயெனது நெஞ்சத்திற்கொண்டு-எ-று. (அ௬)

கொண்டநெறி சற்றுங் குலையார் மனத்திருக்கு
மண்டர்கோ வேயருணை யண்ணலே-தொண்டர்க்
கிடையாது நெஞ்ச மிருவினையா லென்று
மடையா தெழுபிறப்பாமல்.

(இ-ள்.) தாங்கள்கொண்ட நெறிமுறைகிஞ்சித்துகொடாத அடியார்களது மனதில் நினைத்திருக்கும் தேவதேவனே அண்ணமலைக் கிறைவனே உமது அடியார்களுக்கு புத்திகொடாது நல்வினை தீவினையென்னுமிருவினையால் எழுவகைத்தோற்றமென்னும் துன்பத்திற்கிடமாகிய பிறப்பு எப்போதும் அணுகாது-எ-று.

அல்லாதொரு தெய்வ மறியே னறிந்தாலு
நல்லதென்று நெஞ்சகத்தி னடேன்யான்-சொல்லரிய
வண்ணு மலைமேவு மண்ணலையு மண்ணவிடத்
துண்ணு முலையாளை யும்.

(இ-ள்.) சொல்லுதற்கரிய அண்ணுமலையில் வசிக்குங் கர்த்தனையும் அவரது இடப்பாகத்திலமர்ந்தஉண்ணுமுலையம்மையும் அல்லாமல் வேரே தெய்வத்தையறியேன், அப்படியறிந்தாலும் இதுமோட்சத்தைகொடுக்கும்நல்லதெய்வமென்று இருதயத்தில் நினையேன்.

உம்மை நினைந்தே யுருகி யருணேசர்
தம்மை நினைந்தார் தமக்கல்லா-லிம்மையிலே
யெல்லாருங் காண வெளிதே புவிமீதி
னல்லார் துதிக்கு நடம்.

(இ-ள்.) மூவாசையை யொழித்த ஞானவான்கள் துதிக்கும்அருணாசலக்கடவுளேஉண்மையாகநினைத்து மனமுறுகத் தோத்திரஞ் செய்பவர்களுக்கெல்லாம்இப் பிறப்பில்மற்றயாவருங்கண்டுதெரிசிக்க அரிதாகும்இப் பூவுலகின்கண் நல்ல பெரியோர்ளோடுகண்டுதோத்திரஞ்செய்யும் நடனம்-எ-று. (அகூ)

நடலையறுத் தாளருணை நம்பனுக்கன் பில்லா
ருடலையொறுத் தாலாவ துண்டோ-வடலை நா
லோதினுற் பாச மொழியுமோ புற்றிலே
மோதினுற் பாம்புசா மோ.

(இ-ள்.) நடலையென்னும் பிறப்பையறுத்துரட்சிக்கும் அருணாசலக்கடவுளிடத்தில் அன்பில்லாதவர்கள்ஜெபதபங்களில் உடலைவருந்தியதால் ஆவதொன்றுண்டோ வேதசாஸ்திரங்களைவாசித்ததினுல் ஆசபாசமென்றுங் கர்மங்கள்நம்மைவிட்டுநீங்குமோநீங்காது அப்படிபோலபுற்றைத் தடிகொண்டடித்தால் அதனுள்ளிருக்கும் பாம்பு இறந்து போமோஇறவாதுள்ளிருத்தால்போலே அவர்கள்பாபகருமங்களும் நீங்காது.

ஈஸ்வரபக்தியில்லாதவர்கள்செய்யும்

விரதம்விருதாவாம் என்பதாம்.

மோகமறேன் சோணகிரி மூர்த்தியே மும்மலத்தின்
ருகமறே னின்பெருமை தானறியேன்-காகநாய்
தம்மதென்னுங் காயத்தைத் தானெடுத்துத்தாரணியி
னம்மதென்னுங் கண்டாய் நரி.

(இ-ள்.) அருணாசலக்கடவுளே புல்லனாகியயான் மோகமென்னும் ஆசையைநீக்கேன் ஆணவம்மாயை காமியமென்னும் மும்மலத்தினா லுண்டாகியவிருப்பத்தையும் அகற்றேன் உமதுபெருமை யிப்படிப்பட்டது என்னுமறியேன் மானிடசரீரத்தைப்பெற்று காக்கைநரியாய்முதலியவைகள்தங்களுக்கிறையென்று நினைத்துக்கொள்வதல்லாமல் அச்சரீரத்தால்வேறுபிரயோசனங்காணேன்-எ-று. (௩௧)

நரிக்குப் பொதிசோறு நான்சுமந்து நொந்தே
னரிக்கு மரிதர் மரனே-தெரிக்குமறை
காணாத சோணகிரிக் கண்ணுதலே நின்பதத்தைப்
பேணாத நாயேன் பிறந்து.

(இ-ள்.) மகாவிஷ்ணுவானவர்காணுதற்கரிய ஈசனே நான்குவேதங்களாலும் அறியப்படாத அருணாசலக்கடவுளே நெற்றிக்கண்ணையுடையவனே உமதுபாதாரவிந்தத்தை நினைத்து தோத்திரஞ்செய்யாத அடியேன்யிச்சரீரமெடுத்து நரிபுசிப்பதற்கு கட்டுசோறெனச்சுமந்து துன்பப்பட்டேன்-எ-று. (௩௨)

பிறந்திறக்குந் தெய்வப் பிணங்களைக்கொண் டாடே
னறந்தழைக்குஞ் சோணகிரி யாரே-பிறந்திறவா
வும்மைப் புகழ்ந்தே யுமக்கடிமை யானபேர்
தம்மைப் புகழ்வதல்லாற் றான்.

(இ-ள்.) தருமமே மிகுதியாய்த்தழைத்து திருவண்ணாமலையில் வசிக்குங் கர்த்தனே பிறப்பிறப்பில்லாத தேவரீரைதோத்திரஞ்செய்து உமக்கடிமையான பக்தர்களைத் துதிப்பதல்லாமல் பிறந்து பிறந்திருக்குந்தெய்வமென்னும் பிணங்களைக்கொண்டாடித்தோத்திரஞ் செய்யேன்-எ-று. (௩௩)

தானவர்கண் முப்புரத்தைத் தானெரித்து நஞ்சுகந்தீர்
வானவர்க்காச் சோணகிரி வள்ளளே-ஏனம்
விருப்பா மலர்சூடி வேண்டினு னீண்ட
நெருப்பா விருந்ததென்ன நீர்.

(இ-ள்.) சதுர்யுகத்திலுமழியாத அருணசலக்கடவுளே முப்புராதிகளானயிராட்சரது உபத்திரவத்தினுலுமசமுத்திரத்திலுதித்தவிஷத்தினது கொடூரத்தினுலும்பிரந்துதுதித்த தேவர்களுக்காக அந்தராட்சதர்களுடனேமுப்புறத்தையெரித்துப்கடலிலெழுந்தவிஷத்தைப் புசித்தும் அவர்களை யிரட்சித்தீர் மகாவிஷ்ணுவானவர் பன்றியாகி தேவரீரதுபாதாரவிந்தங்களைக் காண ஆசையோடு பூமியைத்துளைத்துக் கொண்டுசென்றும் அவருக்குப் புலப்படாமல் நெருங்குதற்கரிய அக்கினிமலையி லிருந்தென்ன சொல்வீர்-எ-று. (௩௪)

நீராழி நஞ்சுகந்த நித்தனே சோணகிரி
யாரா வமுதேயென் னையனே-பாராளுந்
தாதையே பூசையறந் தானறியா மற்றிரியும்
பேதையேற் காராவார் பின்.

(இ-ள்.) சமுத்திரத்திலே பிறந்த விஷத்தையுண்டபிறப்பில்லாதவனே திருவண்ணமலையில் வசிக்குந்தெவிட்டாத அமுதமே என்னையனே சகலபுவனங்களிலுமுள்ள சராசரங்களை யிரட்சிக்குந்தந்தையே உம்மைப்பூசிக்குநெறியும் தர்மமுமறியாமல் திரியும் அறிவில்லாதவனுகிய அடியேனுக்கு உம்மையல்லாமல்ஆதரவுயார்-எ-று, (௩௫)

பின்னை யொருவரில்லை பேருலகிற் றஞ்சமா
வன்னந் தருமருணை யையரே யென்னை

யெடுப்பதற்குங் காப்பதற்கு மென்பிறவி நோயைக்
கெடுப்பதற்கு நீரே கெடீர்,

(இ-ள்.) சகலசீவஜெந்துக்களும் அன்னங்கொடுத்
துரட்கிக்கும் அருணசலக்கடவுளேயென்னை ஒருபொ
ருளாக நினைத்து சிருஷ்டிப்பதற்கு சிருஷ்டித்து இர
ட்சிப்பதற்குமெனதுபிறப்பென்னும் இவ்வுலகில் தஞ்
சமென்றடைந்த என்னைஇரட்சிப்பதற்குவேறொருதெ
ய்வமில்லை-எ-று. (கசு)

நீர்கொண்ட வேணி நிமலாவென் னீள்பிறைப்பை
யார்தொலைப்பார் நீயல்லா தாயுங்காற் பாற்மீதிற்
பொய்யா வரங்கொடுக்கும் புண்ணியனே சோணகிரி
யையா கருணு லயா.

(இ-ள்.) கங்காதேவியை சடா மகுடந்திற்றரித்த
சோதிஸ்வரூபனே அழியாதவரத்தைக் கொடுக்கும்
புண்ணியனே அருணசலக்கடவுளே அன்பரதுமன
தை ஆலயமாகக்கொண்டவனே பார்க்குமிடத்தில்என
து அளவில்லாத பிறப்பிறப்பை அழிக்கவல்லவர் நீ
ரேயல்லாமல் இப்பூவுலகில் யார்மனமே-எ-று, (கஎ)

கருணுல யாநின் கழல்பணிய மாட்டே
னருணச லாவென் றழையேன்-மரணந்த
காலத்தி லோதுங் கருத்தறியேன் கண்ணையுன்றன்
கோலத்தில் வையேன் குறித்து.

(இ-ள்.) கிருபைக்கடலான ஐயனே உமதுபாதார
விந்தங்களைவணங்கித் தோத்திரஞ்செய்தேன் அருண
சலக்கடவுளே யென்றும் அழையேன் மரணகாலத்தி
லும் உம்மைநினைத்து நற்கதியடையும் வழியறியேன்
என துகண்களைக்கொண்டு தேவரீரது ஸ்வரூபத்தை
ப்பாரே-எ-று. (கஎ)

குறியே னிருபதத்தைக் கூறும் வகைசற்
றறியே னறிந்தவர்க்கொன் ருற்றேன்-சிறியேனின்
ருயுமறை தேடறிய வண்ணு மலையானே
மாயுமிருந் தையா மனம்.

(இ-ள்.) நான்குவேதங்களுந்தேடுதற்கரிய அருணு சலக்கடவுளே சிறிய வனுகியயான் தேவரீரைத்துதித் து உமதுபாதாரவிந்தங்களை அடையும்வகையுஞ்சற்று மறியேன் அறிந்த புண்ணியவான்களுக்கும் ஒருவுபகா ரஞ்செய்வேன் என்மனமானது சும்மாயிருந்தலைச்சல் பட்டுஇறந்துபோம்-எ-று. (௬௬)

ஐயா மரப்பாவை யாடுவதுஞ் சூத்திரிதன்
கைவாசி யோபாவை கற்றதே-வெய்யவினை
யென்னிச்சை யோவருணை யீசா படைத்தளிக்கு
முன்னிற்சை யன்றே வுரை,

(இ-ள்.) என்னையனே மரத்தினுற்செய்த பதுமை நடிப்பது ஆட்டிவைக்கும் சூத்திரக்காரனது கைப்ப ழக்கத்தினுலே அல்லது அந்தப்பதுமை நடிப்பது போற் கொடியவினைகள் என்னிச்சையாற்செய்ததோ அருணுசலக் கடவுளே சீவசெந்துக்களை சிருஷ்டித்து இரட்சிக்குந்தேவரீரிச்சையாற் செய்வதல்லவோ சொ ல்லும்-எ-று. (௭)

உரைக்கு மடியா ருயிர்ப்பயிர்வா டாமற்
றரைக்குளா னந்தவெள்ளந் தன்னை-நிரைக்குமே
யெண்ணுர் புரமெரித்த வெந்தை யருணகிரிக்
கண்ணு ரமுதமெனுங் கார்.

(இ-ள்.) மதியாதவர்களது முப்புரத்தையெரித்த என்னையனுகிய அருணுசலக்கடவுளது கிருபாநோக்க

மென்னுமேகம் தமதுமகிமை புத்தியுடனே துதிக்கும் அடியாரது உயிரென்னும் பயிர்வாட்டமடையாமல் இப்பூமியில் ஆனந்தமென்னும் வெள்ளத்தையுநிறப் பும்-எ-று. (௱க)

அருணகியந்தாதி யழகுவெண்பா நூலும்
கருணையுடன் கற்றோரைக்கண்டு அருணையண்ணல்
வீறனபொன்னுலகில் வேந்தனுக்கு மாற்றாக
மாறாமல்வைப்பார் மகிழ்ந்து.

(இ-ள்.) அருணகியந்தாதியென்னும் அழகுபொருந்திய வெண்பா நூலையும்பக்தியோடுவாசிப்பவர்களைப்பார்த்து அருணாசலக்கடவுள் சந்தோஷித்து மேன்மைபொருந்தியதேவலோகத்தையாளும் தேவேந்திரனுக்குச்சமமாகதேவலோகத்தில்எப்போதும் நீங்காமல்வைப்பார்கள்-எ-று. (௱உ)

அருணகிரியந்தாதி.

மூலமும்-உரையும்

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

ரிஜிஸ்டர்செய்து அச்சிட்டிருக்கும் புஸ்தகத்தின்

விளம்பரம்

இரணியநாடகம்	0	5	0
வெ-அரிச்சந்திரவிலாசம்	0	8	0
கெங்கம்மா நாடகம்	0	3	0
சயிந்தவநாடகம்	0	3	0
பதினெட்டாம்போர்நாடகம்	0	3	0
வள்ளியம்மன்: விலாசம்	0	4	0
சாரங்கதரன்சரித்திரப்பா	0	4	0
நூற்றெட்டுத் திருப்பதிகீர்த்தனை	0	4	0
மயிலாசலக்கீர்த்தனை	0	3	0
ஸ்ரீமகாபக்தவிஜயம்	0	12	0
இரண்டாம்பாகம் ஸ்ரீமகாபக்தவிஜயம்	1	8	0
ஷை கலிக்கோபயிண்டு	2	0	0
அயோத்தியகாண்டம் உரை	2	8	0
சோதிட சந்திரநாடி	0	10	0
நாலுகாண்டம் வயித்தியகாவியம்-1200	0	12	0
இலக்ஷ்மணுதேவிமாலையிடுநாடகம்	0	4	0
சீமந்தினிகல்யாணநாடகம்	0	4	0
கெருடகெர்வபங்கநாடகம்	0	4	0
மலையாள மாந்திரீக அரிச்சுவடி	0	4	0
வன்னியர்புராணம் மூலமும்-உரையும்	1	8	0

ஞானவெட்டியான் மூலமும்-உரையும் அச்சிட்டு வருகிறோம் கூடியசீக்கிரத்தில் வெளியாகும்.

இப்புத்தகம் வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்க் கெழுதி பெற்றுக்கொள்ளளாம.

இப்படிக்கி.

டி. ஆர், வெங்கிடேசமுதலியார்
நெ, 34, முத்துகிருஷ்ணன் தெருவு
மின்ட் போஸ்டு மதருஸ்.